Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
www.divhomes.com

34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 34 பாலம்: 19 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 01, 2024

# இலங்கை அதிபராக அனுர குமார திஸாநாயக்க பதவியேற்பு

இலங்கையில் 2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெற்ற இலங்கை அதிபருக்கான ஒன்பதாவது தேர்தலில் வென்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 10ஆவது அதிபராக செப்ரெம்பர் 23ஆம் திகதி கொழும்பில் உள்ள அதிபர் செயலகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் அனுர குமார திஸாநாயக்க பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றார்.

தேசிய மக்கள் கட்சி (NPP)இன் சார்பில் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட அனுர குமார திஸாநாயக்க தேசிய மக்கள் கட்சியின் தலைவராகவும் ஜனதா விமுக்தி பெரமுன (JVP)இன் தலைவராகவும் இருந்து வருகிறார். மத்திய மாகாணத்தில் உள்ள கலேவெல என்னும் இடத்தில் 1968ஆம் ஆண்டு நொவெம்பர் 24ஆம் திகதி திஸாநாயக்க முதிபன்சேலாகே அனுர குமார திஸாநாயக்க பிறந்தவர். 55 வயதான அனுர குமார திஸாநாயக்க 'AKD' என்று சுருக்கமான பெயரில் அழைக்கப்படுகிறார். இவரது தகப்பனார் ஒரு சாதாரண அலுவலகப் பணியாளர். மற்றும் இவரது தாயார் வீட்டுப் பணிகளைச் செய்பவர். இவருக்கு ஒரு சகோதரி இருக்கிறார்.

AKD தம்புதேகம காமினி மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி பயின்று பின்னர் தம்புதேகம மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்று அங்கிருந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார். இக்கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்ற முதல் மாணவர் AKD.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றிருந்தாலும் AKD அங்கு சிறிது காலம் கல்வி பயின்று பின்னர் களனி பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் பெற்றார். அங்கு இளங்கலை விஞ்ஞான மானிப் பட்டத்தை 1995ஆம் ஆண்டில் பெற்றார்.

இலங்கையின் ஏனைய அதிபர்களைப் போல் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டவர்களது குடும்பப் பின்னணியில் இருந்து AKD வரவில்லை. அவர் மாணவராக இருந்த காலத்திலேயே 1987ஆம் ஆண்டிலேயே JVPஇன் அரசியல் கொள்கையில் கவரப்பட்டு JVPயில் சேர்ந்து அரசியல் வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார்.



பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத்தில் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய AKD, பட்டதாரியானதும் 1995ஆம் ஆண்டிலேயே JVPயின் மத்திய செயற்குழுவில் உறுப்பினர் ஆனார்.

அனுர குமார திஸாநாயக்க 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவர் முதலில் தேசியப் பட்டியலில் இருந்து நியமிக்கப்பட்டிருந் தாலும், பின்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி (SLFP)யுடன் JVP கட்சியும் சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு (UPFA) என்ற பெயரில் போட்டியிட்டு வென்றது. அத்தேர்தலில் JVP 39 ஆசனங்களைப் பெற்றிருந்தது. AKD குருநாகல் மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போதைய இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்க AKDஇற்கு விவசாயம், கால்நடை, நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பதவி வழங்கியிருந்தார்.

பின்னர் 2015 செப்ரெம்பர் முதல் 2018 டிசம்பர் வரை AKD எதிர்க்கட்சியின் தலைமை விமர்சகராகப் பணியாற்றினார். 2014 பெப்பிரவரி 2இல் நடைபெற்ற JVPயின் 17ஆவது தேசிய மாநாட்டில் கடந்த 23 வருட காலமாகத் தலைவராக இருந்த சோமவன்ச அமரசிங்கவிற்குப் பிறகு JVPயின் தலைவராக AKD நியமிக்கப்பட்டார். 1965 மே 14இல் ரோஹண விஜேவீராவால் ஆரம்பிக்கப்பட்ட Janatha vimukthi peramuna (JVP) இற்கு ஐந்தாவது தலைவராக AKD 2014 பெப்பிரவரி 2இல் பதவியேற்றார்.

2019 ஓகஸ்ட்இல் நடைபெற்ற இலங்கை அதிபருக்கான எட்டாவது தேர்தலில் AKD போட்டியிட்டு 3% (418,553) வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்தார்.

2024 செப்ரெம்பர் 21இல் நடைபெற்ற இலங்கை அதிபருக்கான ஒன்பதாவது தேர்தலில் முதற் சுற்று வாக்கு எண்ணிக்கையில் 42.31% (5,634,915) ஐயும், பின்னர் இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் 55.88% (5,740,178) வாக்குகளையும் பெற்று இலங்கையின் பத்தாவது அதிபராகத் தெரிவானார்.

அனுர குமார திஸாநாயக்கவிற்கு மல்லிகா என்ற மனைவியும், ஒரு பிள்ளையும் இருக்கின்றனர்.

இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவு அறிவித்தவுடன் AKD சமூக வலைத்தளம் Xஇல், "இந்தச் சாதனை எந்த ஒரு தனிநபரின் உழைப்பின் விளைவு அல்ல. நூறாயிரக்கணக்கான உங்களின் கூட்டு முயற்சி. உங்களது அர்ப்பணிப்பு எங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்துள்ளது. அதற்காக நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இந்த வெற்றி நம் அனைவருக்கும் சொந்தமானது" என்று தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "நம்பிக்கையினாலும், எதிர்பார்ப்பினாலும் நிரம்பிய கோடிக்கணக்கான கண்கள் எம்மை முன்நோக்கித் தள்ளுகின்றன. ஒன்றாக இணைந்து இலங்கை வரலாற்றை மீண்டும் எழுத நாங்கள் தயாராக இருக்கிறோம்" என்றார்.

இலங்கை அதிபர் வரையறுக்கப்பட்ட தரவரிசை வாக்களிப்பு முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இத்தேர்தல் நடைபெறும் முறையை விளக்கமாகத்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

IMMIGRATE TO Canada
VRONS Immigration Services Ltd.
VISIT | STUDY | WORK | IMMIGRATE
PRANAVAN SOMARAJA RCIC, MBA
Contact us 647 559 7780
www.vrons.ca

NACPT PHARMA COLLEGE
O/A North American College of Pharmaceutical Technology
CANADIAN STUDENT VISA PILOT PROGRAM
Visitor Visa மூலம் வந்துள்ள இலங்கை மாணவர்களுக்கு
DLI Institution
MORE INQUIRY: 647 998 7374
info@nacptpharmacollege.com
www.nacptpharmacollege.com
Campus Locations: Toronto: 9 - 5310 Finch Ave East, Toronto, ON M1S 5E8 | Brampton: 44 Queen St E, Brampton, ON L6V 1A2

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436

HOMELIFE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
TRUTH BUILDS TRUST

# New Industrial / Office Building

**Mostly Anticipatent New Project**

on

2711, Markham Road

(@ NASHDENE)

Scarborough, ONTARIO




For further Info :

**Please Call : 416 321 6969**

Raja Mahendran
raja@mahendran.ca
Broker / Owner.

Gulshan Sharma
Sales Representative
gksharmaca@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969 * Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அனுரவின் வெற்றி எப்படிச் சாத்தியமானது?

**– அரவின் –**

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் பாரம் பரிய அரசியல் கட்சிகளுக்குச் சவாலை யும், முற்போக்கு சக்திகளுக்கு புதிய நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறது.

1971 ஆயுதக் கிளர்ச்சியில் தோல்வி அடைந்து, 1982 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்து, 1987 ஆயுதக் கிளர்ச்சி யில் தோல்வியடைந்து, பின்னர் 1994ஆம் ஆண்டு தொடக்கம் ஜனாதிபதித் தேர்தல் களில் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்துவந்த ஜேவிபி, இந்தமுறை வெற்றி பெற்றிருக்கிறது.

இதுவரை காலமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது இவற்றின் ஆதரவு பெற்ற ஏதோ ஒரு தரப்பு மாத்திரமே, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறது.

அந்த நிலை மாறி, முதல்முறையாக மூன்றாவது சக்தி ஒன்றின், அதுவும் இடது சாரிக் கட்சியொன்றின் வேட்பாளர் இந்தத் தேர்தலில் வெற்றியைப் பெற்றிருக்கிறார்.

இந்த வெற்றி பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கிறது.

ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டிருக் கிறது. அதன் கிளையாகத் தோன்றிய ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை, ஆணிவேராகக் கொண்ட - மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் உருவாக்கப் பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன, இந்தத் தேர்தலில் மிகப்பெரிய தோல்வியைச் சந்தித்திருக்கிறது.

பொதுத் தேர்தல்களில் கம்பஹா மாவட்டத்தில் பசில் ராஜபக்சவுக்கோ, குருநாகல் மாவட்டத்தில் மஹிந்த ராஜபக்சவுக்கோ, கிடைத்த விருப்பு வாக்குகளின் எண்ணிக்கைகூட, முழு இலங்கையிலும் நாமல் ராஜபக்சவுக்கு கிடைக்கவில்லை.



ஒரு மாவட்டத்தில் பெற்ற வாக்குகளைக் கூட அவரால் முழு நாட்டிலும் பெற முடியாமல் போனது, 2020 பொதுத் தேர்தலில் ஐதேகவுக்கு விழுந்த பேரிடிக்குச் சமமானது.

அனுர குமார திசநாயக்க சுமார் 43சதவீத வாக்குகளைப் பெற்றே இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்.

அவர் 50சதவீத ஆதரவைப் பெற்ற ஜனாதிபதியாக முதல் சுற்றில் தெரிவு செய்யப்படவில்லை. இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் தான் அவரது தெரிவு இடம் பெற்றிருக்கிறது.

முதற் சுற்றில் 46 இலட்சம் வாக்குகளைப் பெற்று, இரண்டாம் சுற்றில் சுமார் ஒரு இலட்சம் விருப்பு வாக்குகளைப் பெற்று அதிபராகத் தெரிவானார்.

அனுர குமார வெற்றி பெற்றிருக்கிறார். அவர் நிறைவேற்று அதிகாரம் முழுவதை யும் பிரயோகிக்கக்கூடிய அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஆணை பெறாத ஜனாதிபதி என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்தன. ஆனால் அனுர குமார திசநாயக்க ஜனநாயகத் தேர்தல் மூலம் வெற்றி பெற்ற ஜனாதிபதி ஆனார்.

அவரது இந்த வெற்றி பாரம்பரிய சிங்களக் கட்சிகளின் தவறுகளின் விளைவு என்பதுதான் சரியானது.

அவர்கள் மீதான நம்பிக்கை தேய்ந்து போயிருக்கிறது. அவர்கள் மத்தியில் ஊழல்களும் மோசடிகளும் அதிகரித்து மக்களை வெறுப்படைய வைத்திருக்கிறது. இதுவரை ஆட்சியில் இருந்த கட்சிகள், ஆட்சியாளர்கள் செய்த தவறுகள் அனைத்தும் மக்களை மிக மோசமாகப் பாதித்திருக்கிறது.

இதன் விளைவாக அவர்கள் மாற்று சக்தி ஒன்றைத் தேடும் நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றனர். அதன்மீது நம்பிக்கை வைத்துப் பார்ப்போம் என்று வாக்களித்திருக்கின்றனர்.

அதுதான் அனுர குமாரவின் வெற்றிக்குக் காரணம்.

அனுர குமார திசநாயக்க அடைந்துள்ள வெற்றி, தனியே அவருக்குரியது அல்ல. அது தவிர்க்க முடியாதபடி அவர்மீது நம்பிக்கை வைக்கவேண்டிய சூழல், ஏற்படுத்திய வெற்றி.

பிற தரப்புகளின் தவறுகளால் கிடைத் திருக்கின்ற வெற்றி.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் சரியான வியூகங்களை அமைத்துப் போட்டியிட்டிருந்தால் நிச்சயமாக அனுர குமாரவின் வெற்றி சாத்தியமாகியிருக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்த இரண்டரை ஆண்டுகளும், பொதுஜன பெரமுனவின் பிரமுகர்கள் அவரைத் தவறாக வழி நடத்தத் தொடங்கினர்.

அதனால்த்தான், ஆரம்பத்தில் ரணில் - ராஜபக்ச அரசாங்கம் என்ற விமர்சனங் களை உருவாக்கியது, காலப்போக்கில் ரணில் விக்கிரமசிங்க, மொட்டுக் கட்சி யினரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு ராஜபக்சவினரை தவிர்க்கத் தொடங்கினார்.

அதன்மூலம் அவர், குற்றச்சாட்டுக்குள்ளா கிய ராஜபக்சவினரிடம் இருந்து, தான் விலகி விட்டதாகக் காட்ட முற்பட்டார்.

கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் தவறு இழைத்தோர் தன் பக்கம் இல்லை என்று நிரூபிக்க முயன்றார்.

தன்னுடன் இணைந்து நாட்டைக் கட்டி எழுப்பியவர்கள்தான் இருக்கின்றனர் என்று காட்டவும் முனைந்தார்.

இதன்மூலம், தான் தொடர்ந்து ஆட்சியில் இருக்கலாம் என்று அவர் தப்புக் கணக்கு போட்டார்.

நாட்டு மக்கள் மத்தியில் என்ன கருத்து நிலவுகிறது, அவர்கள் எதனை எதிர் பார்க்கின்றனர், எதனை வெறுக்கின்றனர், என்றெல்லாம் அவர் ஆட்சியில் இருந்து கொண்டபோது கணித்துக் கொள்ளத் தவறிவிட்டார்.

அவருக்கு இருந்த பலத்தைக்கொண்டு, இவ்வாறான கணிப்புகளை சுலபமாகச் செய்திருக்க முடியும். அவ்வாறு செய்திருந்தால் அவர் இப்படி ஒரு மோசமான தோல்விக்குச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்காது.

சஜித் பிரேமதாசவும்கூட தனது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்கு பெரியளவில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவில்லை. அவர் தன்னிடம் உள்ளவர்களை ரணில் தட்டிப் பறித்துச் சென்று விடக்கூடாது என்பதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தினார்.

ரணில் விக்கிரமசிங்கவை எதிர்ப்பதில் காட்டிய தீவிரத்தை அனுர குமாரவின்மீது காட்டவில்லை.

இவர்கள் இருவரின் பிளவு, ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரிய வாக்கு களை இரண்டாக உடைக்க உதவியது.

அதன் விளைவாக, சஜித் பிரேமதாசவுக்கு 43.63 இலட்சம் வாக்குகள்தான் கிடைத்தன. ரணில் விக்கிரமசிங்க கணிசமான வாக்குகளை அவரிடம் இருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களை சேர்த்துக் கொண்டதால் எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

அவர்களில் சுமார் 100 பேரைத் தன் பக்கம் இழுத்துக்கொண்டு அவர்களின் ஆதரவு இருப்பதாகக் காட்டிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க கடைசியில் ஏமாந்து விட்டேன் என்று கூறி இருக்கிறார்.

பொதுஜன பெரமுனவினர் தனது பக்கம் வந்தபோது, அவர்களின் ஆதரவாளர் களும் தன் பக்கம் வருவர் என்று நம்பிய தாகவும், ஆனால் ஆதரவாளர்கள் இல்லாமல் வெறுமனே எம்.பிக்கள் மட்டும் வந்து தன்னை ஏமாற்றிவிட்டனர் என்றும் அவர் தனது இயலாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

பொதுஜன பெரமுனவினரும் சரி, அதன் ஆதரவாளர்களும் சரி, மகிந்த ராஜ பக்சவையே கைவிட்டு விட்டபோது, ரணில் விக்கிரமசிங்கவை எப்படிக் காப்பாற்றுவர்?

ரணில் விக்கிரமசிங்க தன்னைப் பற்றி மிகையாகக் கற்பனை செய்து கொள்ளத் தொடங்கி, யதார்த்தத்தை மறந்து விட்டார்.

அவர் தொங்கு பாலக் கதைகளைக் கூறினார். அதில் சாகசம் செய்ததைப் பற்றிக் கூறித் திரிந்தார். ஆனால், அந்தத் தொங்குபாலம் அறுந்து போகும் நிலை யில் இருப்பதை அவர் கவனிக்கவில்லை.

பாலத்தின் முடிவிடத்துக்கு வந்து விட்டதாகக் கூறிய அவர், அதற்கு முன்னர் அறுந்து போகப் போகிறது என்பது தெரிந்திருக்கவில்லை.

அவர் இப்போது தானும் தோற்று சஜித் பிரேமதாசவையும் தோற்கடித்திருக்கிறார்.

சஜித் பிரேமதாசவைத் தோற்கடித்தது அனுர குமார திசநாயக்க அல்ல நிச்சயமாக அவரது தோல்விக்குக் காரணம் ரணில் விக்கிரமசிங்கதான்.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


விளம்பரம்
VLAMBARAM™

34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இலங்கை.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிந்து கொள்ள 2024 செப்ரெம்பர் 15ஆம் திகதி விளம்பரம் பத்திரிகையைப் பார்க்கவும். இலங்கை அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் செல்லுபடியான வாக்குகளில் 50%இற்குமேல் ஒரு வாக்கையாவது பெற்றிருக்க வேண்டும். முதற் சுற்று வாக்கு எண்ணிக்கையில் இதை ஒருவரும் பெறாவிட்டால், அதிக வாக்குகளைப் பெற்ற முதல் இரு வேட்பாளர்களைத் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் நீக்கப்பட்டு, அவர்களுக்கு விழுந்த வாக்குச்சீட்டில் உள்ள வாக்கானது அடுத்த விருப்பு வாக்காளருக்கு அந்த வாக்கு அளிக்கப்பட்டு மீண்டும் எண்ணப்படும்.

## 2024 செப்ரெம்பர் 21 அதிபர் தேர்தல் முடிவுகள்

முதற்சுற்று வாக்கு எண்ணிக்கை

| வேட்பாளரின் பெயர் | கட்சி | வாக்குகள் | எண்ணிக்கை சதவீதம் |
|---|---|---|---|
| அனுர குமார திஸாநாயக்க | NPP | 5,634,915 | 42.31% |
| சஜித் பிரேமதாசா | SJB | 4,363,035 | 32.76% |
| ரணில் விக்கிரமசிங்க | IND 16 | 2,299,767 | 17.27% |
| நாமல் ராஜபக்ஷ | SLPP | 342,781 | 2.57% |
| பாக்கியசெல்வம் அரியநேத்திரன் | IND 9 | 226,343 | 1.70% |

| | வாக்குகள் | எண்ணிக்கை சதவீதம் |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | 17,140,354 | - |
| வாக்களிக்கப்பட்ட வாக்குகள் | 13,619,916 | 79.46% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 300,300 | 2.2% |
| செல்லுபடியான வாக்குகள் | 13,319,616 | 97.8% |

முதற்சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் ஒருவரும் 50%+1 வாக்கிற்குக்கூட பெறாத படியால் அதிக வாக்குகளைப் பெற்ற அனுர மற்றும் சஜித்தைத்தவிர ஏனைய 36 வேட்பாளர்களும் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு அவர்களுக்கு விழுந்த மொத்த வாக்குகளில் (3,321,666) உள்ள அடுத்த விருப்பு வாக்காளர் தெரிவு அனுர அல்லது சஜித்ஆக இருந்தால் அவர்களுக்கு அந்த வாக்குகள் அளிக்கப்பட்டு மீண்டும் எண்ணப்பட்டது. இவ்வாறு எண்ணப்பட்ட விருப்பு வாக்குகளின் விபரம்

| வேட்பாளரின் பெயர் | வாக்குகள் |
|---|---|
| அனுர குமார திஸாநாயக்க | 105,264 |
| சஜித் பிரேமதாச | 167,867 |
| செல்லுபடி அற்ற வாக்குகள் | 3,048,535 |

இச் செல்லுபடியற்ற வாக்குகள், விருப்பு வாக்காளர் தெரிவுகள் அற்ற வாக்குச்சீட்டுகள் அல்லது அவ்விருப்பு வேட்பாளர் தெரிவு அதிபர் தேர்தலில் இருந்து நீக்கப்பட்ட 36 பேரில் ஒருவராக இருக்கிறார்.



## 2024 செப்ரெம்பர் 21 அதிபர் தேர்தல் முடிவுகள்

இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை

| வேட்பாளரின் பெயர் | கட்சி | வாக்குகள் | எண்ணிக்கை சதவீதம் |
|---|---|---|---|
| அனுர குமார திஸாநாயக்க | NPP | 5,740,179 | 55.88% |
| சஜித் பிரேமதாசா | SJB | 4,530,902 | 44.12% |

செல்லுபடியான மொத்த வாக்குகள் 10,271,081

இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையின் முடிவில் செல்லுபடியான வாக்குகளில் 55.88% (50% +1ஐவிட அதிகம்). வாக்குகளைப் பெற்று அனுர குமார திஸாநாயக்க இலங்கை அதிபர் தேர்தலில் வென்றவராக இலங்கையின் தேர்தல் ஆணையம் அறிவித்தது.



Mr.Dissanayake being sworn in by Chief Justice Jayantha Jayasuriya

இலங்கையில் இதுவரை நடைபெற்ற எட்டு அதிபர் தேர்தலிலும் இலங்கை அதிபர் முதற்சுற்று வாக்கு எண்ணிக்கையில் 50%+1இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தனர். இம்முறை நடைபெற்ற ஒன்பதாவது அதிபர் தேர்தலிலேயே முதன்முறையாக இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையின் பின்னரே 50%+1இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று அதிபர் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தேர்தல் ஆணையம் மும்மொழிகளிலும் எவ்வாறு விருப்பு வாக்குகளை இடவேண்டும் என ஊடகம் வாயிலாக பலமுறை அறிவுறுத்தல்கள் வெளியிட்டிருந்தது. ஆனாலும், பல வேட்பாளர்கள் தங்களுக்கு மட்டும் புள்ளடியிடுமாறு கூறியிருந்தனர். இதனால் குழம்பிய வாக்காளர் ஒருவருக்கு புள்ளடியும் வேறு ஒரு வேட்பாளருக்கு 2 என வாக்களித்ததாலேயே பெரும்பாலான வாக்குகள் செல்லுபடியற்றனவாகியிருந்தன. வேட்பாளர்கள் 'தங்களுக்கு மட்டும் புள்ளடி போடுமாறு' கேட்காமல் 'தங்களுக்கு மட்டும் 1 என எழுதுமாறு' கேட்டிருந்தால் இவ்வாறு பெருமளவு வாக்குகள் வீணாகியிருந்திருக்க மாட்டாது. தமிழ் பேசும் வாக்காளர்கள் உள்ள ஐந்து மாவட்டங்களில் மட்டுமே 55,994 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகி இருந்தன. கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே 31,796 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாகி இருந்தன.



இலங்கை அதிபராக அனுர குமார திஸாநாயக்க செப்ரெம்பர் 23இல் பதவியேற்ற பின்னர் செப்ரெம்பர் 24இல் பல்கலைக்கழக விரிவுரையாளரான ஹரிணி அமரசூரியவை இலங்கையின் பிரதமராக நியமித்தார். அவருக்கு பிரதமர் பதவியுடன் நீதி, கல்வி, தொழிலாளர், தொழில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் முதலீடு ஆகிய அமைச்சுக்களும் அளிக்கப்பட்டுள்ளன.



NPP கட்சியைச் சேர்ந்த ஹரிணி இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் ஆவார். ஏனைய இரண்டு NPP நாடாளுமன்ற உறுப்பினர்களாக விஜித ஹேரத் மற்றும் லக்ஸமன் நிபுணாராச்சி ஆகியோரும் அமைச்சரவை அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் தற்போது மூன்று NPP நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் உள்ளதால் அவர்கள் மூவருக்குமே எல்லா அமைச்சுக்களும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை பதவி ஏற்ற பின்னர் செப்ரெம்பர் 24 நள்ளிரவுடன் இலங்கையின் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை இலங்கை அதிபர் அனுர குமார திஸாநாயக்க கலைத்து 2024 நொவெம்பர் 14ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 17ஆவது நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறு அறிவித்துள்ளார்.

NPP கட்சியை சேர்ந்த மூன்று அமைச்சர்களுமே இந்தத் தேர்தல் காலத்தில் காபந்து அரசாங்கத்திற்கு (Custodial Government) பொறுப்பாக இருப்பர்.



Anura Kumara Dissanayake & his wife Mallika Dissanayaka

இலங்கையின் புதிய பிரதமரான ஹரிணி அமரசூரிய (54 வயது) இந்தியாவில் உள்ள டெல்கி பல்கலைக்கழகத்தின் இந்துக் கல்லூரியில் சமூகவியலில் இளங்கலைப் பட்டத்தை 1994ஆம் ஆண்டு பெற்றார். அதன்பின்னர், அவுஸ்திரேலியாவில் பயன்பாட்டு மானுடவியலில் (Applied Anthropology) முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். இவர் Edinburgh பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் (Social Anthropology) முனைவர் பட்டமும் பெற்றுள்ளார். அதன் பின்னர் இலங்கைக்கு வந்து அங்கு சர்வதேச மனிதாபிமான மற்றும் மேம்பாட்டுத் துறையில் (International Humanitarian and Development Sector) பணியாற்றினார்.

இலங்கையில் தென் மாகாணத்தில் உள்ள காலியில் ஹரிணி அமரசூரிய 1970 மார்ச் 6இல் பிறந்தவர். இவர் 2019ஆம் ஆண்டில் NPP கட்சியில் இணைந்து அவ்வருடம் நடைபெற்ற இலங்கை அதிபருக்கான தேர்தலில் AKDஇற்காக பிரச்சாரம் செய்தார். 2020 ஒகஸ்ற்இல் இலங்கை நாடாளுமன்றத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினராக தேசியப்பட்டியல் மூலம் நியமனம் பெற்றார்.



இலங்கையின் 17ஆவது நாடாளுமன்றத்திற்கான தேர்தலுக்கு வேட்பாளர்கள் நியமனப் பத்திரங்களை 2024 ஒக்ரோபர் 4ஆம் திகதியில் இருந்து 11ஆம் திகதி வரை தாக்கல் செய்யலாம். நொவெம்பர் 14ஆம் திகதி நடைபெறும் தேர்தலின் பின்னர் இலங்கையின் புதிய 17ஆவது நாடாளுமன்றம் 2024 நொவெம்பர் 21இல் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**யாரையும் நம்பி யாருக்காகவும் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்! இறுதியில் நம்மைக் குற்றவாளி ஆக்கிவிட்டு அவர்கள் ஒதுங்கி விடுவர்...**

# வெற்றி பெற்றாரா பொது வேட்பாளர்?

**– முகிலன் –**

நடந்து முடிந்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு தனது இலக்கில் ஒரு பகுதி மாத்திரம் வெற்றி பெற்றிருக்கிறது.

இத்தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு, 226,343 வாக்குகள் கிடைத்திருந்தன. சவாலான சூழலில் இந்த வாக்குகள் முக்கியமானவை.

கடந்த முறை தமிழ் மக்கள் ஆதரித்த சஜித் பிரேமதாசவும் இந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டிருந்தார்.

தமிழ் அரசுக் கட்சியும் எதிர்த்து நின்றது. ரணில் மற்றும் சஜித் போன்ற பாரம்பரிய சிங்களத் தலைமைகளின் மீதான வெறுப்பில் இருந்த மக்கள், ஒரு மாற்றத்திற்காக வாக்களிக்கும் சிந்தனையிலும் இருந்தனர்.

இவ்வாறான ஒரு சூழலுக்கு மத்தியில், தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு, அவருக்கு இரண்டே கால் இலட்சம் பேர் வாக்களித்திருக்கின்றனர்.

வடக்கில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், பருத்தித்துறை, உடுப்பிட்டி, யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்துறை என ஆறு தேர்தல் தொகுதிகளில் மாத்திரம் தமிழ்ப் பொது வேட்பாளர் அதிகமான வாக்குகளுடன் வெற்றி பெற்றிருக்கிறார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஏனைய ஐந்து தொகுதிகளான கிளிநொச்சி, சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய் மற்றும் காங்கேசன்துறைத் தொகுதிகளில் தமிழ்ப் பொது வேட்பாளரைவிட சஜித் பிரேமதாசவுக்கு அதிக வாக்குகள் கிடைத்திருந்தன.

எதிர்பார்க்கப்பட்டதுபோல, வன்னி மாவட்டத்திலோ திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலோ தமிழ்ப் பொது வேட்பாளருக்கு அதிக வாக்குகள் கிடைத்திருக்கவில்லை.

இது ஏமாற்றம் தருகின்ற ஒரு விடயம் என்பதை மறைக்க வேண்டியதில்லை.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய போது, 5 இலட்சம் வாக்குகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைச் சாத்தியமில்லை என்பது ஏலவே தெரிந்த விடயம்தான்.

ஏனென்றால் இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பெருமளவு சலுகைகளை வழங்க முன்வந்திருந்தார். அது குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் மத்தியில் அவருக்கான ஆதரவை அதிகரிக்கச் செய்திருந்தது.

ஏனைய மட்டத்தினர் மத்தியிலும் அவர் நிவாரணங்கள் சலுகைகளை வழங்கி வாக்குகளைக் கவர முயன்றிருந்தார். அதுவும் இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. ரணில்மீது வெறுப்படைந்திருந்த பாரம்பரிய தமிழ் வாக்காளர்கள், அவரை தோற்கடிப்பதற்காக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கத் தயாராக இருந்தனர் என்பதும் கவனிக்க வேண்டிய ஒன்று.



தென்பகுதியில் அனுர குமார திசநாயக்கவுக்கு அதிகரித்து வந்த ஆதரவு, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பயத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியதையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்த கட்சி, காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனக் கூறுகின்ற கட்சி, இனப்பிரச்சினை என ஒன்று இருப்பதையே ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற கட்சி, இப்படிப் பல காரணங்களால் அனுர குமார திசநாயக்க ஆட்சிக்கு வருவதை, தமிழ் மக்கள் பலரும் சாதகமான ஒன்றாகக் கருதவில்லை.

அது சஜித் பிரேமதாச பக்கம் வாக்காளர்கள் திரும்புவதற்குக் காரணமாக இருந்தது.

இப்படிப்பட்ட சூழலில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்குகள் குறைந்திருப்பது ஆச்சரியம் இல்லை. தமிழ்ப் பொது வேட்பாளரின் பிரசாரம் போதாது. அதற்குக் கால அவகாசம் இருக்கவில்லை. காலதாமதமாகவே பிரசாரங்களும் தொடங்கப்பட்டன. இப்படிப் பல பலவீனங்களும் இருந்தன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாடுகளும், பொது வேட்பாளருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், பொது வேட்பாளருக்குக் கிடைத்த இந்த வாக்குகள் தீர்க்கமானவை. மிகத் தெளிவானவை. எதிர்காலம் குறித்த அச்சத்தில் இருந்த தமிழ்மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பவை.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஊடாக, தமிழ் மக்கள் கட்சிகள் ஒன்றிணைக்கப்பட்டு வலுப்படுத்தப்படும் சாத்தியம் ஒன்று உள்ளது என்பது இதனூடாக வெளிப்படுத்தப்பட்டது.

தமிழர் ஒன்றுபட்டு நின்றால், வலுவான சக்தியாக எழுந்து நிற்கலாம் என்பதும் இந்தத் தேர்தலின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதனால்த்தான் தேர்தல் முடிந்த கையுடன் கூட்டாக இணைந்து செயற்பட வருமாறு எல்லா அரசியல் கட்சியினரும் அழைக்கின்றனர்.

இப்படியிருக்க, தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்றும், அவருக்கு 1.67 வீதமான வாக்குகள்தான் கிடைத்திருக்கின்றன என்றும் அறிக்கை ஒன்றை வெளியிட்டு, தனது அரசியல் குறை நிலையை வெளிப்படுத்தியிருக்கிறார் சுமந்திரன்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகள், கடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு அதாவது - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த மொத்த வாக்குகளைவிட சுமார் ஒரு இலட்சம்தான் குறைவு என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த பொதுத் தேர்தலின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ரெலோ, புளொட், ஆகிய கட்சிகளும் இருந்தன. அவை இம்முறை தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்திருந்தன.

அப்படிப் பார்த்தால், கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த சுமார் மூன்றே கால் இலட்சம் பேரில் இரண்டே கால் இலட்சம் பேர், பொது வேட்பாளர் பக்கம் திரும்பி இருக்கின்றனர் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுமார் ஒரு இலட்சம் பேர் மாத்திரம் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டுடன் இணைந்து இருக்கின்றனர்.

அதேவேளை சுமந்திரன், 1982ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலில் 2.62சதவீத வாக்குகளைப் பெற்றார். ஆனால், அரிய நேத்திரனுக்கு 1.67வீத வாக்குகள்தான் கிடைத்திருக்கின்றன என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால், 1982ஆம் ஆண்டு குமார் பொன்னம்பலத்திற்குக் கிடைத்த வாக்குகளைவிட மேலதிகமாக, 50 ஆயிரம் வாக்குகள் அரியநேத்திரனுக்கு கிடைத்திருக்கின்றன.

அதனை அவர் மறந்து விட்டார் அல்லது மறைத்து விட்டார்.

குமார் பொன்னம்பலத்தைவிட, அரிய நேத்திரனுக்கு வாக்கு சதவீதம் குறைந்திருப்பதற்கு, தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிக்காதமைதான் பிரதான காரணம்.

1982 ஜனாதிபதித் தேர்தலின்போது மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை, 66 இலட்சமாகும்.

இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் நடந்தபோது வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை 171 இலட்சமாகும்.

இந்த 42 வருட கால இடைவெளிக்குள், இலங்கையில் சராசரியாக வாக்காளர் எண்ணிக்கை இரண்டரை மடங்காக உயர்ந்திருக்கிறது.

ஆனால் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை அவ்வாறு அதிகரிக்கவில்லை.

உதாரணத்திற்கு, யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், 1982ஆம் ஆண்டு 493,000 வாக்காளர்கள் இருந்தனர். இந்த எண்ணிக்கை இரண்டரை மடங்காக அதிகரித்திருந்தால் வாக்காளர்களின் எண்ணிக்கை 12 இலட்சத்தைத் தாண்டி இருக்க வேண்டும்.

ஆனால் இப்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை 5 இலட்சத்து 93 ஆயிரம் மட்டுமேயாகும்.

அதாவது, இருக்க வேண்டிய அளவில், பாதி வாக்காளர்கள்தான் இருக்கின்றனர். அவர்களிலும் கணிசமானோர் அண்மையில் கனடா விசா எடுத்துக்கொண்டு சென்று விட்டனர்.

இதுபோன்ற பல காரணங்களால் வாக்களிப்புக் குறைந்திருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 ஆயிரம் வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் கணிசமான வாக்குகள் சங்கு சின்னத்துக்கு புள்ளடியிடப்பட்ட பின்னர், விருப்பு வாக்குகள் குறிக்கப்பட்டிருந்தவை. வாக்காளர்கள் மத்தியில் இருந்த தெளிவின்மையே இதற்குக் காரணம்.

தமிழ் வாக்காளர்கள் இந்தமுறை வாக்களித்தது மிகக் குறைவு. யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 68சதவீத வாக்காளர்கள் மாத்திரம் வாக்களித்திருந்தனர்.

இதுபோன்ற பல காரணங்களால்த்தான் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்குகள் குறைந்தன.

அதனை வைத்துக்கொண்டு தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறமுடியாது.

அப்படியானால், அரியநேத்திரனுக்கு வாக்களித்த இரண்டேகால் இலட்சம் மக்களையும், சுமந்திரன் பொருட்டாக மதிக்கவில்லை என்று எடுத்துக் கொள்வதா? அவர்களை தமிழ் மக்களாகவே மதிக்கவில்லையா?

அப்படி ஒரு கருத்து அவரிடம் இருக்குமேயானால் வரப்போகும் பொதுத் தேர்தலில் சுமந்திரன், பெரும் சவாலை எதிர்கொள்வார்.



# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

### 1.1 யாழ்ப்பாணத் தமிழர் கல்வி

வரலாற்றுக் காலத்திலிருந்து யாழ்ப்பாணத் தமிழர் கல்விமீது அசாதாரண ஆர்வம் காட்டினர்.

- பௌதிகச் சூழலும் உற்பத்தி மாதிரியும்
- ஆசிரியத் தொழில்சார்ந்த தனிப்பண்புகள்
- மிஷனரிகளின் பாடசாலை மற்றும் கல்வி விஸ்தரிப்புக்கள்
- பெண்கள் பாடசாலைகளின் எழுச்சி
- கல்வி நிறுவனங்களின் தரமும், எண்ணிக்கையும்
- கல்வி பற்றிய குடும்ப முன்னுரிமைகள்
- உயர் கல்விக்கான சமூக, பண்பாட்டு முன்னுரிமை
- கல்விக்காக புலம்பெயரும் முன்னுரிமை

செழிப்பற்ற மண்ணும், சுண்ணக்கற்பாறைகளும், நிலக்கீழ் நீரை நம்பிய விவசாயத் தொழிலும், மலேரியா பாதிப்பிலிருந்து விலகி வாழ முடிந்தமையும் கல்வி கற்பதற்கு முன்னுரிமை வழங்கும் சமுதாய நோக்கத்தை வலுப்படுத்தியிருந்தது. குடும்ப விவசாயமும், சிறுபயிர்ச் செய்கையுமே மேலோங்கியிருந்தன.

புகையிலை, வாழை, மரவள்ளி, வெங்காயச் செய்கையே முன்னுரிமை பெற்றிருந்தது. பருவமழையும், நிலக்கீழ் நீருமே நீர்வள முகாமைக்குத் துணை செய்தது. பெரிய ஆறுகளோ, அணைக்கட்டுக்களோ வளர்ச்சி பெறவில்லை.

வன்னி நிலப்பரப்பில் மாத்திரம் குளங்களை நம்பிய விவசாய முயற்சிகள் அதிகம் இடம்பெற்றன. வறட்சியான தீவகப் பிரதேசங்களிலிருந்து காட்டுவளம் நிறைந்த வன்னிப் பகுதிக்கு காலத்துக்குக் காலம் மக்கள் புலம்பெயர்ந்து குடியேறினர். அரசின் வாலிபர் குடியேற்றத்திட்டம் (1958) செத்தல் மிளகாய், வெங்காய உற்பத்திக்கான அரச ஊக்குவிப்பு (1970) ராணுவ நடவடிக்கைகள் போன்ற பல காரணங்களால் வன்னிப் பிரதேசத்தில் தீவக மக்கள் அதிகளவில் குடியேறினர். யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் ஒப்பிடும்போது இங்கு கல்வி வளர்ச்சி தாமதமாகவும் மெதுவாக வும் நிகழ்ந்ததென்பது உண்மையாகும். இந்தத் தீவக அல்லது வன்னிப்பிரதேச மக்களே முதலிலும் அதிகளவிலும் சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்தோர் என்பது மிக முக்கியத்துவம் கொண்ட உண்மையாகும்.

சிக்கன வாழ்வு என்பது அல்லது 'கல்வனிச' கலாசாரம் வடபகுதி தமிழ் மக்களின் பலமான சமுதாயப் பண்பு ஆகும். இது கல்வி முனைப்பை கூர்மைப்படுத்தியே வந்துள்ளது.



கல்வியில் செலவிடுவது குடும்ப நல அசைவியக்கத்துக்குரிய நீண்டகால முதலீடு என்பதில் அதிக நம்பிக்கை கொண்டு வாழ்ந்தோர் வடபுலத்துத் தமிழர் என்பது கவனத்துக்குரியது.

சிறுவர் ஊழியத்தை ஊக்குவிக்கும் வாய்ப்புக்களும் பெண் கல்வியைத் தடுக்கும் சமுதாய உணர்வு மற்றும் தேவைகளும் அதிகம் வளரவேயில்லை.

கல்வியினால் பெறப்படும் தகைமைகளும், சான்றிதழ்களும் அதிஉயர் முன்னுரிமை பெறும் சமூகமாக வடபகுதித் தமிழர் வரலாறு முழுவதும் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

முறைசார் படிப்பும், தேசிய கல்வித் தராதரங்களும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அவசியமானவை என்ற கருத்தியலை ரொனால்ட் டோர் (Ronald Dore) வலியுறுத்துகிறார். இதனால் சான்றிதழ் பெறும் சமூக நோய் (Diploma Decease) பரவுவதாகவும் அவர் விளக்கியுள்ளார். இதனால் கல்வித் தகைமையை மையப்படுத்தும் சமூகப் பண்பாடு வடக்கில் வளர்ந்தது, வலுவடைந்தது.

கல்வி கற்பதற்காகக் கடன்படுவதை வடபகுதித் தமிழ்க் குடும்பங்கள் தயக்கம் இன்றி தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர்.

மூத்த மகனுடைய உயர் கல்விக்காகக் கடன்படுவதை குடும்பத்தின் முழுமையான மேன்மைக்குரிய முதலீடாகவும் பொறுப்புணர்வாகவும் நம்புகின்றனர். இது சமுதாய விழுமியமாகவும் வலிமை பெற்றிருந்தது.

நிறைவான பாடசாலைக்கல்வி (10+2)யைப் பெற்று எழுதுவினைஞராக வருவதில் அதிக அக்கறை கொள்வதும் பல்கலைக் கழகக் கல்வியைத் தாமதிப்பதும் இயல்பான குடும்ப முன்னுரிமையாயிருந்தது. படிப்பும், நல்ல அரச உத்தியோகமும், சாதிரீதியான தடைகளைக் கடந்து செல்லவும் பலசமயங்களில் உதவுவதாகவும் நம்பப்படுகின்றது.

சுயமொழிக் கல்வி, இலவசக் கல்வி, இலவச உயர்கல்வி, தொழில்நுட்பவியல் கல்வி தொடர்பான எல்லா நலன்களையும் மிகக் கவனமாகப் பயன்படுத்துவதில் யாழ்ப்பாண அல்லது வட பிரதேச மக்கள் எப்போதும் அதீத கவனம் கொண்டுள்ளனர்.

இந்தியாவில் தமிழகத்தில் நிலவுவதுபோல் கல்வி நிறுவன அனுமதிகளிலும், தொழில் பெறுவதிலும் சாதிவாரி ஒதுக்கீட்டு உரிமை சார்ந்து ஏற்பாடுகள் எதுவுமில்லை. இதனால் வடபகுதி மக்களைப் பொறுத்து வளர்ச்சிக்குரிய கடவுச்சீட்டாக (Passport) கல்வி சிறப்புப் பெற்றிருப்பதும் சிறப்பானது.

1800-1900 காலப்பகுதியில் நிலவிய சமூக நம்பிக்கைகளும், சமூகக் கட்டமைப்பும், பலம்மிக்க உயர்கல்வியையும், மேன்மைத் தொழில்களையும் அனைவரும் பெறுவதை சாத்தியமற்றதாக்கி இருந்ததென்பதும் உண்மைதான்.

1945இல் கல்வி மந்திரியாயிருந்த C.W.W. கன்னங்கராவினால் இலவசக் கல்வித் திட்டம் அறிமுகமானதன் பின்பு கல்வி பொதுப்பண்டமாக (Public food) மாறிவிட்டது. தொடக்கக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை இலங்கையில் மாத்திரமே இலவசக் கல்வி அரச செலவில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. வடபகுதி வாழ் குடும்பங்கள் இந்த வாய்ப்பை உச்சமட்ட அளவில் பயன்படுத்தி வந்தனர்.

சாதாரண உடல் தொழிலாளி ஒருவரின் நான்கு பிள்ளைகள் சமகாலத்தில் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் கல்வி கற்கும் நிலைமைகள் இங்கு பெரிதும் இயல்பானவை.

பொருள் தேடல், சிக்கனமாக வாழ்தல், பெண்களுக்கு உயர்கல்வி வழங்குதல் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்குவது போலவே கல்வியில் முதலீடு செய்வதும் வடபகுதித் தமிழர் குடும்பங்களின் முன்னுரிமையாகவே இருந்து வருகிறது.

## கல்வி நிறுவனங்கள்

வடபகுதி மக்களது கல்வி மேலாதிக்க நிலைமைக்கு இப்பகுதிகளில் செயற்பட்டு வருகின்ற பல்வேறு மட்டங்களிலான கல்வி நிறுவனங்களின் தொன்மையும் எண்ணிக்கையும் தொழிற்படும் தராதரமும் முக்கியமான காரணிகளாகும்.

### A. பாடசாலைகள்

1505இல் போர்த்துக்கேயர் இலங்கையில் நுழைவதற்கு முன்பு திண்ணைப்பள்ளிகள் பல பிரதேசங்களில் சிறப்புப் பெற்று இயங்கி வந்தன. ஆனால் அவை சமூக ரீதியில் கீழ்த்தட்டு மக்களை இணைத்துக் கொள்ளவில்லை.




ஆனால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் (1505-1948) மெதடிஸ்ற் (Methodist), பப்டிஸ்ற்(Baptist), சேச் (Church), அமெரிக்க மிஷனரியினர் தாபித்து, நிர்வகித்த ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகள் ஏராளம். சராசரியாக 4-5 மைல் தூரங்களுக்குள் ஏதேனும் ஒரு பாடசாலையைக் காணும் நிலைமை காணப்பட்டது.

- தரமான ஏராளம் ஆரம்பப் பாடசாலைகள்
- விடுதி வசதியும் விஞ்ஞானக் கல்வியும் கொண்ட உயர்தர (AB வகை) பாடசாலைகள்
- தரமான ஆய்வுக்கூடங்களும், தகுதி மிக்க உயர்வகுப்புக்குப் போதிக்கும் விஞ்ஞான ஆசிரியர்கள் கொண்ட பல உயர்தரப் பாடசாலைகள்
- பெண்களுக்கெனத் தனியாகவும், விடுதி வசதிகளுடனும் இயங்கும் ஏராளமான பெண்கள் பாடசாலை. இவற்றில் 1928இல் ஸ்தாபிக்கப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியின் பங்களிப்பு மிகவும் முதன்மையானது.




- பட்டப்படிப்புகள் வழங்கும் பற்றிக் கோட்டா செமினரியினால் ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி
- பாடசாலைகளிலிருந்து இடை விலகுவோருக்கு உதவும் தொழில்நுட்பக் கல்லூரி முதன்முதலாக 1920களில் கொக்குவிலில் ஸ்தாபிக்கப்பட்டது. இது மிகவும் பழமையானது.
- தொழில்நுட்பப் பட்டம் வழங்கும் பல்கலைக்கழகக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருத்தல். மரபு வழியல்லாத பட்டம் வழங்கும் அரச நிறுவனம்.

(தொடரும்)

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

## நாமும் நமது இல்லமும் 663

# ஆதன விலை இறக்கம் தொடருமா?



**ராஜா மகேந்திரன்,** P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2022 மார்ச் மாதத்திற்குப் பின்பாக தொடர்ச்சியாக ஆதன விலை வியாபாரம் இறங்குவதாலும், கனடியப் பொருளாதாரம் நெருக்கடியில் இருப்பதாலும் மத்திய அரசு மேலும் ஒரு பொருளாதாரச் சுருக்கத்தை (Recession) தவிர்ப்பதற்கான பல முயற்சிகளைத் தொடர்ந்து எடுத்து வருகின்றது.

ஆதன வியாபாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த, டிசெம்பர் 15ஆம் திகதியில் இருந்து புதிதாக நடைமுறைக்குக் கொண்டு வரக்கூடிய முன்மாதிரியான அடமானக்கடன் நடைமுறைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் ஆதனவிலை $1 மில்லியன் வரையான ஆதனங்கள் மட்டுமே 5% ஆரம்ப முதலீட்டுடன் ஆதனம் கொள்வனவு செய்ய முடியும். ஆதன நடைமுறையானது ஆதன விலையை $1.5 மில்லியன்வரை உயர்த்தியுள்ளது.

அதாவது $1.5 மில்லியன் நிலையிலான ஆதனத்தைக் காப்புறுதியுடன் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அதாவது 20%இற்குக் குறைவான முதலீட்டுடன் $1.5 மில்லியன் வரையான ஆதனங்கள் டிசம்பர் 15, 2024இற்கு பிற்பாடு வாங்க முடியும்.

அதாவது முதல் $500,000வரை 5% ஆரம்ப முதலீடும் மிகுதி 10%வரையான ஆரம்ப முதலீடு செய்ய முடியும்.

அத்துடன் புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனம் வாங்குவோர் முதலாவது முறையாக ஆதனம் வாங்குவதாக இருந்தால் அடமானக்கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலம் 25 வருடங்களிலிருந்து 30 வருடமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அடமானம் வைத்திருந்து இவ் அடமானக் கடனை, மீள எடுக்கும்போது, (Renewal of Mortgage) ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் STRESS TEST நடைமுறைப்படுத்தப்படாது. அதாவது புதிதாக அடமானக் கடன் பெறும்போது வாங்குபவரின், கடனின் தகுதியைக் கணக்கிடும்போது, நிதி நிறுவனம் கொடுக்க இருக்கும் கடனின் வட்டி வீதத்தை விட (Agreed mortgage interest rate) மேலும் 2% அதிகமாக கணக்கில் வைத்துப் பெறப்பட இருக்கும் அடமானக் கடனின் பெறுமதி கணிக்கப்பட்டு வருகின்றது. இதனால் குறைந்தளவு அடமானக் கடனே பெற முடியும்.

அத்துடன் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் stress test புதிதாக மீளப் பெறும் அடமானக் கடனிற்கு பாவிக்கப்படாது. இதனால் அடமானக் கடனைப் புதுப்பிக்கும்போது வேறு கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்கு அடமானக் கடனை மாற்றும்போது இலகுவாகவும் குறைந்த வட்டிவீதத்தையும் பெறக்கூடிய வசதிகள் ஏற்படும்.

கடந்த ஜூன் 2024இலிருந்து மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்து வருகின்றது. ஏற்கனவே மூன்று தடவைகள் 0.25% என்ற கணக்கில் 0.75% இனால் 5%இலிருந்து 4.25%ஆகக் குறைத்துள்ளது.

அடுத்து வட்டிவீதத்தை நிர்ணயிக்கும் திகதி புதன்கிழமை, ஒக்ரோபர் 23, 2024 ஆகும். கனடிய பணவீக்கம் 8.1% இலிருந்து 2%ஆகக் குறைந்துள்ளது. கனடிய மத்திய வங்கியின் பணவீக்க நிர்ணயக் கோட்பாடு 1%இலிருந்து 3% ஆகும்.



ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட பணவீக்கத்தை கனடியப் பொருளாதாரம் அடைந்திருப்பதால் ஒக்ரோபர் 23, 2024 அன்று 1/2%வரையான வட்டிவீதக் குறைப்பை கனடியர்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும் ஒரு 1/2% வட்டிவீத இறக்கம் ஏற்பட்டால் ஆதன வியாபாரத்தில் ஓர் உந்துதலைக் கொடுக்கும் என்பதனை எதிர்பார்க்கலாம்.

ரொறொன்ரோவிலும் அதனைச் சுற்றியுள்ள பெரும்பாகத்திலும் அடுக்குமனை வியாபாரம் எதிர்பார்க்காதளவிற்கு ஸ்தம்பிதம் அடைந்துள்ளதனைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக புதிதாக நிர்மாணம் செய்யப்பட இருக்கும் அடுக்குமனை ஆதனங்களே விற்க முடியாமல் இவ்வாறான நெருக்கடியான நிலையில் உள்ளது.

அத்துடன் ஏற்கனவே கட்டப்பட்டு, மக்கள் வாழும் அடுக்குமனையின் வியாபாரமும் இறங்குமுகமாகவே உள்ளது.

இதற்குக் காரணம், முதலீட்டிற்காகக் கொள்வனவு செய்த மனைகளின் மாதாந்தக் கொடுப்பனவைச் சமாளிப்பதற்காக, ஆதன உரிமையாளர்கள், மேலதிகமாக மாதாமாதம் தமது சொந்தப் பணத்தைக் கொடுப்பனவு செய்யவேண்டியுள்ளது. இதனால் அதிக முதலீட்டாளர்கள் தம்மிடம் இருக்கும் ஆதனத்தைக் குறைந்த விலையிலாவது விற்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் அடுக்குமாடி கட்டும் நிறுவனங்கள் புதிதாகக் கட்ட இருக்கும் தொகுதிகளைப் பின்போட்டுள்ளன.

3 Bedrooms for rent in a 3 bedrooms bsmt. Sharing kitchen & washroom. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.825.6338**

## ROOM FOR RENT

**CONLINS & SHEPPARD**

Rooms available for rent. Shared kitchen & wash room. 1 Parking available. Close to U of T. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE FOR RENT

**MCLEVIN & MALVERN ST.**

3 bedrooms house for rent. 2 parking. Close to bus stop, shopping centre & Leon. Avail. immediately.

**647.898.6790 / 647.741.0469**

## HOUSE & BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**

3 Bedrooms house & 3 Bed rooms bsmt & 2 Bedrooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.764.5246**

## HOUSE & BASEMENT FOR RENT

**SIMCOE ST. & TAUNTON OSHAWA**

4 Bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Close to Bus stop & all facilities. Avail. immediately.

**647.717.3712 / 647.717.3702**

## HOUSE FOR RENT

**SEASON DRIVE & OASIS BLVD**

3 Bedrooms & 2.5 washrooms house for rent for short / long term. 2 car parking available. infront of brookside public school. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.786.0051**

## BASEMENT & ROOM FOR RENT

**CHURCH & KINGSTON (AJAX)**

2 Bedrooms bsmt for rent. 2 Bed rooms for rent in upstairs. Parking available. Close to TTC & all facilities. No pets & No smoking. Avail. immediately.

**647.869.1252/ 416.844.9102**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**

1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, Shared kitchen & washroom. Famale only. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.451.1365**

## வாகனப் போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்டதூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**

3 Bedrooms & 1 full washroom bangalow house main floor for rent. 5 min. walking distance to Bus, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**WARDEN & ELLESMERE**

3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail. October 2024.

தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT

**BURKHOLDER DR. & TAUNTON**

3 Bedrooms house for rent. 2.5 washrooms. 2 big living rooms & 3 parking. No pets & No smoking. Durham region Transport. Avail. October 16, 2024.

தொடர்புகளுக்கு: **647.739.8865**

## HOUSE FOR RENT

**WARDEN & LAWRENCE**

6 Bedrooms house for rent. 3 Wash rooms & 2 Living rooms. 2 Families can share. Close to TTC, Shopping mall, School & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.854.5171**

## BASEMENT & ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

1 Bedroom bsmt with sep. entrance for rent $1300 + 30% utility. 1 Very large bedroom for rent $1400. 2 Male preferred. Also other room available $600. No alcohol, no pets & no smoking. Avail. immediately.

**647.507.2148/647.864.1051**

## BASEMENT / ROOM FOR RENT

**MARKHAM & HWY 7**

4 Rooms with 2 full washrooms basement /Rooms for rent. Parking & Shared kitchen. $650 per room / $2,200 full basement. Avail. immediately

தொடர்புகளுக்கு: **416.666.5051**

## BASEMENT & ROOM FOR RENT

**MCCOWAN & ELLESMERE (Front STC) / HWY 7 & 9TH LINE**
**MEADOWVALE & ELLESMERE / VICTORIA PARK & ST.CLAIR**
**FINCH & TAPSCOTT / HWY 401 & BURTHUST**

We have multiple size upper rooms & basements in GTA.

Please Contact: **647.762.6070 /437.999.8566**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## ROOM IN COLOMBO

**GALLE RD – DEHIWALA**
Holiday rooms available for rent - Short term
Close to sea side.
தொடர்புகளுக்கு: **416.399.2416**

## CATERING SERVICES

Homemade Sri Lankan food catering services available (vegetarian and non-vegetarian)
**Please call 416.904.2734 for more details**

## பெண் சாரதி தேவை

Ajax பகுதியில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் 10 வயதுடைய பெண் பிள்ளை ஒருவரை பாடசாலையிலிருந்து Scarboroughவில் உள்ள வீட்டில் விடுவதற்கு பெண்சாரதி ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: **647.646.2616**

## HOUSE & ROOM FOR RENT

**OSHAWA** - 4 Bedrooms detached house for rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**PETERBOROUGH** - 4 Bedrooms & 2 washrooms detached house for rent.
**BEAVERTON** - 4 Bedrooms house for rent.
**WARDEN & FINCH** - 2 Rooms for rent in a Condo..
**STAYNER** - 5 Bedrooms house for rent.
தொடர்புகளுக்கு: **647.702.2159/ 647.706.5191**

## AZ TRUCK DRIVERS

**AZ Truck Drivers Wanted**
**Location – USA**
**20 People needed immediately.** (2 Years experience in truck driving)
Contact: **416.771.8041**

## சமையல் ஆள் தேவை

Birchmount & Lawrence பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சமையல் செய்வதற்கு அனுபவமுள்ள பெண் ஒருவர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.993.9709**

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலையை அண்மித்த பகுதியில் கொழும்புத் துறை வீதி பாண்டியன்தாழ்வில் 2 பரப்புக் காணி மற்றும் கடையுடன்கூடிய அழகிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: **437.441.5699**
email: saitheva09@gmail.com

## MAKEUP SERVICES

Saree pleating, saree draping, and simple makeup & hair style are available
**Please call 416.904.2734 for more details**

## நியூ ரங்கனாஸ் நகைமாடம்



* திருமணத்திற்கான தாலிக்கொடி, மற்றும் அனைத்து நகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
* தங்கநகை அடகுச் சேவை.
* பழைய தங்கநகைகள் விற்பனை

**CASH FOR GOLD**

மேலதிக விபரங்களுக்கு
**647.702.2159**
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்

## முயல் மூலிகை எண்ணெய்

முடி சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு முயல் மூலிகை எண்ணெய் (Garuda Oil). தூய தேங்காய் மற்றும் ஆலமரத்து விழுதில் தயாரிக்கப்பட்ட எண்ணெய்
தொடர்புகளுக்கு: **437.345.8409**

## HOME RENOVATION



- Home Painting
- Kitchen Counter top
- Kitchen cabinet
- Laminate
- Tile work
- Washroom Vanity
- Hardwood Flooring

உங்கள் நிர்மாண வேலைகள் எதுவாயினும் குறித்த நேரத்தில் அழையுங்கள் : **Krish – 647.642.7646**

## CLEANING CONTRACT

நீங்கள் வாழும் பகுதியில் Cleaning தொழில் முயற்சி ஒன்றினை மேற்கொள்வதற்கு ஆர்வமாக உள்ளீர்களா? எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு: **647.693.6982**

## நிலா திருமணசேவை

28 வயதுடைய (Mechanical Engineer) மற்றும் 32 வயதுடைய (Docter) மண மகன்களுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகிறோம். உங்கள் மனதுக்குப் பிடித்த மணமகன், மணமகளை நிலா திருமணசேவையூடாகப் பெற்றுக் கொள்ளலாம். உடனே தொடர்பு கொள்ளுங்கள்: **437.772.8129**

iwillgetumortgage Services LTD
Brokerage License - 13345

**(416) 823 -2828**

**Looking for a Mortgage?**
# We Have Solutions !!!



- Purchase / Refinance / Switch
- Investment / Rental Properties
- Previous Bankruptcy
- Bridge Loans / HELOC / Business LOC
- Commercial Financing
- Construction Financing
- Self-Employed
- New Immigrants



**Indika Pradeep**
Mortgage Agent L1 | M24000873
www.ipmortgage.ca
ipmortgage.ca@gmail.com
Unit 320, 2100 Ellesmere Road
Scarborough, ON M1H 3B7

## MANAGER, COOK & WAITRESS WANTED

**VICTORIAPARK & HWY 401 (Scarborough)இல் அமைந்துள்ள ENGLISH PUBஇற்கு Experienced MANAGER, LINE COOK & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.**
**Please Contact : 416.566.9994**

## HOME MAINTENANCE

**உங்கள் வீட்டுத் தேவை எதுவாயினும் அழையுங்கள்**

- Basement
- Electric Work
- Plumbing work
- Painting
- Tile work
- Building Maintenance
- General Cleaning (Strip & Wax)
- Carpet, Shambo & Steam Cleaning
- Commercial, Industrial & Residential Cleaning.
- General Maintenance (Grass Cutting, Junk removal)
- Moving for residencial & Commercial (Local & Long distance)
- Airport Ride

போன்ற சகலவிதமான சேவைகளையும் உங்களுக்கு திருப்தியான முறையில் குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.

**416.333.5606 / 647.231.5606**

## ஆயுர்தாரா (ஆயுர்வேத வைத்தியம்)

ஆயுர்வேத வைத்தியத்தில் கைதேர்ந்தவரினால் உடலில் உள்ள வலிகளுக்கும், தலைமுடி பிரச்சினைகளுக்கும் தோல் பிரச்சினைகளுக்கும் மற்றும் பல வியாதிகளுக்கும் பக்க விளைவுகளற்ற வைத்தியம் செய்யப்படும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் சேவை செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

மனோஜ் கார்த்திகேய - **647.718.4540**

## JOB VACANCY

**New comers welcome for consulting services.**

- Work from home
- Make $1200 - $3500 (Per Month)
- Must speak any of one language. (Tamil, Sinhala, Malayalam, Hindi, English)

**Please Contact: 416.388.5054 /Send resume through this email**
**Email: 369consultingservices786@gmail.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12, 13, 14

## For your Special Occasions

**SHORT TERM RENTAL**

**TORONTO**

Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



## 369 CONSULTING SERVICES

**WE MAKE YOUR EXPRESS REFUGEE CLAIMING**

துரித கதியில் அகதி அந்தஸ்து விண்ணப்பித்தல்

**CALL RAJ 416-318-8859**

### WHAT WE OFFER

- ✓ Visitor Visa & Student Visa Application
- ✓ Super Visa & Family Sponser (Spouse)
- ✓ Work Permit & LIMA
- ✓ Rejected Refugee Re-Application
- ✓ Visitor Visa Extension
- ✓ PR & Citizenship Application

OUR SERVICES CAN BE AVAILABLE AT REASONABLE PRICE

### BEST SERVICES

**BUSINESS GRANTS**
Business Grants starting from $ 5,000 to 100,000

**BUSINESS BDC**
Business Bdc loans up to $ 350,000/=

**BANK LOANS**
Personal Bank loans up to $ 50,000/=

FOR MORE INFO

2855 Markham Rd, Unit 301-02, Toronto, Ontario, M1X0C3

416-318-8859, 416-388-5054
369consultingservices786@gmail.com

எமது சேவைகளை நியாயமான கட்டணத்துடன் இங்கு பெற்றுக்கொள்ளலாம்

## wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Scarborough*** – Mccowan & Lawrence
(2Brm + 1Bath + 1 Parking), separate entry **[$2100/month]**
***Brock*** - -Simcoe & Marad rd - Full house
4 Brm + 3 Wrm Parking) **[$2550.00/month]**
***Pickering*** – Brock & Whitevale - Basement
(2Brm + 1Bath + 1 Parking) **[$1900/month]**
***Oshawa*** – Harmony/ Olive – Basement
(1Brm + 1Bath + 1 parking) **[$1450.00/mnth including utilities)**
**Scarborough** - Mccowan & Lawrence - Full House
(2Brm + 2Bath) + 2 Kitchen **[$3,900/month]**
***Scarborough*** – Mccowan & Lawrence– Basement
(2Brm + 1Bath) **[$2,100 / month)**

**Available for Rent**

***Pickering*** – Whitevale Rd/Mulberry Lane - Detached
(4Brm + 4Bath) **[$3,400/m]**
***Whitby*** – Country Lane & Southwell Ave Basement
(2Brm + 1Bath) **[$1600/month]**
***Mississauga***– Confederation / Burnhamthope -Condo
(1Brm + 1Bath) **[$20000/month]**
*Oshawa* – Simcoe St N/Adelaide Ave E – Bungalow
(3Brm + 2Bath) **[$2,600/month]**
***Scarborough*** – Morningside & Ellesmere basement
(1 Brm +1Bath + 2 parking) **[$1750/month]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278** **Watson Property Management - 416.284.9999**

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# கனடாவில் கவிஞர் ஆரணியின் நூல் வெளியீடு



குரு அரவிந்தன்

கனடாவில் உள்ள மார்க்கம் நகரில் செப்ரெம்பர் 14, 2024 சனிக்கிழமை பிற்பகல் 3:00 மணியளவில் இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த முன்னாள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களின் (கவிஞர் ஆரணி) 'நினைவிடைத் தோய்தல்' என்ற கவிதைநூல் வெளியிட்டு வைக்கப் பெற்றது. மார்க்கம் நகரில் உள்ள Aaniin Community Centre, 5665 14th Avenue என்ற இடத்தில் உள்ள அரங்கில் இந்த நிகழ்ச்சி இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான திரு. லோகன் கணபதி கலந்துகொண்டார்.

நிகழ்வின் தொடக்கத்தில், கனடாவின் மதிப்புக்குரிய தமிழ்ப் பிரமுகர்களான பாஸ்டர் ஜெயானந்தசோதி, எழுத்தாளர் குரு அரவிந்தன், இயக்குனர் திரு. மதிவாசன் சீனிவாசகம், திரு. ப. ஜெயச்செல்வன், திருமதி. சுந்தரேஸ்வரி யோகராஜா, திருமதி. செல்வா அருள் ராஜசிங்கம், திருமதி. சந்திரிகா சின்னத்துரை, திருமதி. வனிதா சிவானந்தலிங்கம், திருமதி. ஜெயநிதி சிவானந்தசிங்கம், திரு. கந்தசாமி இளந்திரையன், திருமதி. சிவரஞ்சிதம் ரஞ்சித் அலோசியஸ் ஆகியோர் இணைந்து இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றி வைத்தனர்.



மங்கல விளக்கேற்றியதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசியப் பண், அகவணக்கம் ஆகியன இடம் பெற்றன. கனடிய தேசியப்பண், தமிழ்த் தாய் வாழ்த்து ஆகியன செல்வி. மாதங்கி திருஞானசம்பந்தன் அவர்களால் இசைக்கப்பெற்றன. இதை அடுத்து பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் தலைமையுரை இடம்பெற்றது. தொடர்ந்து ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் வரவேற்புரையும், அடுத்து பிரதம விருந்தினர் திரு. லோகன் கணபதி அவர்களின் உரையும் இடம்பெற்றது. அவர் தனது உரையில் "தாம் வாழும் சமூகத்தின்மீது அக்கறைகொண்டோரே இலக்கியவாதிகளாகப் பிரகாசிக்கின்றனர். இப்படியானவர்களின் பங்களிப்பு எமது சமூகத்திற்கு இன்று அவசியம் தேவைப்படுகின்றது" என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து சுருவில் மக்கள் ஒன்றியத்தின் திரு. கிருஸ்ணபிள்ளை



திருவருள், கனடா - வேலணை ம.ம.வி பழைய மாணவர் சங்கம் சார்பாகத் திரு. சிவஞானம் இளஞ்செழியன், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் க. ரவீந்திரநாதன், ரொறொன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக் குழு சார்பாக திரு. சிவன் இளங்கோ, ஐயப்பன் ஆலயம் சார்பாகத் திரு. குருசாமி சுப்பிரமணியம், தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு அடுத்ததாக கவிஞர் அகணி சுரேஸ் அவர்களால் கவிதை நூல் பற்றிய அறிமுக உரையும், அதைத் தொடர்ந்து முனைவர் திருமதி. வாசுகி நகுலராஜா அவர்களால் நூல் ஆய்வுரையும் நிகழ்த்தப்பட்டன. தனது ஆய்வுரையில் சில கவிதை வரிகளை எடுத்துக்காட்டி ஆசிரியரைப் பாராட்டினார்.

டாக்டர் போல் ஜோசப் அவர்களின் நூல் நயப்புரையைத் தொடர்ந்து, நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம் பெற்றன.

நூலாசிரியர் நிகழ்வை ஏற்பாடு செய்தோருக்கும், வருகைதந்தோருக்கும் நன்றி தெரிவித்தார். அதன்பின் நூல் ஆசிரியரால் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வுக்கு வருகைதந்தோருக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் தொகுப்பாளராகத் திருமதி. ஜோதி ஜெயகுமார் பணியாற்றினார்.






# ஆண்டவனின் இறுதி அழைப்புக்குள் இருப்போருக்கும் ஆயுள் காப்புறுதி



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

## Life Insurance for Fatal Stage

ஆண்டவனால் ஆத்மாவின் அழைப்புக்காக இறுதிக் கட்டத்தில் காத்திருப்போர்களும் கனடாவில் ஆயுள் காப்புறுதிக்கு மனு செய்யலாம்.

தடையே இல்லை.

"ஆண்டவனால் ஆத்மாவின் இறுதி அழைப்பு என்பதை நேரடியாகச் சொல்லும்போது எல்லோர் மனதும் சங்கடப்படும்." அது இயற்கையின் நியதி. அந்த அழைப்புக்காக நாம் எல்லோரும் வரிசையில் காத்திருப்பவர்கள்.

இவ்வுலகினைவிட்டுப் பிரிந்து செல்லும் போதுகூட நம்மை நேசிப்போர்களுக்கு ஏதோ ஒன்றினை வழங்கிவிட்டுச் செல்ல வேண்டும் என்ற ஏக்கம் இல்லாதோர் இவ் உலகில் அநேகமாக இருக்கமாட்டார்கள்.

இங்கு இறுதி அழைப்பு என்பது வாழ்வின் முடிவு நெருங்கிவிட்டது என்பதை மருத்துவர்களால் உறுதிப்படுத்தும் நிலைமையினைக் குறிப்பிடுகின்றேன்.

உண்மையான மருத்துவ நிலைப்பாடுகளை அதிஉச்ச விசுவாசத்தின் அடிப்படையில் கேட்கப்படும் சகல கேள்விகளுக்கும் நேர்மையாகப் பதில் வழங்கி, பிரகடனம் செய்து, உடன்படிக்கைகளில் சொல்லப்படும் நிபந்தனைகளையும் புரிந்துகொண்டு ஆயுள் காப்புறுதியில் சேர்ந்து கொள்ளுங்கள்.



காப்புறுதி என்றுமே கைவிடாது. கனடாவின் காப்புறுதிச் சட்டங்கள், காப்புறுதியில் சேர்ந்தோருக்கு என்றும் பாதுகாப்பு அரணாயிருக்கும். நேர்மையாக மருத்துவ நிலைமைகளைப் பிரகடனப்படுத்திக் காப்புறுதிகளில் சேரும்போது கனடாவின் நீதித்துறையும் என்றும் காப்புறுதி செய்தோர் பக்கம் நிற்கும்.

அதனையே 'மருத்துவ பரிசோதனைகள் இல்லாத ஆயுள் காப்புறுதித் திட்டம்' (Non - Medical Life Insurance Plan) எனக் குறிப்பிடப்படும்.

### அங்கு என்ன மாதிரியான நிபந்தனைகள் ?

* செலுத்தப்படும் மாதக் கட்டுப்பணம் சற்று அதிகமாக இருக்கும்.

* ஆகக் கூடுதலாக $50,000வரையான தொகைக்கு மட்டும் செய்து கொள்ளலாம்.

* முதல் இரு வருடங்களில் ஆண்டவனின் அழைப்புக்குள் சென்றுவிட்டால் செலுத்திய பணத்தினை மட்டும் ஒரு சிறிய வட்டியுடன் தாங்கள் பணம் பெற உரித்துடையவர் எனப் பதிவு செய்யப்பட்டவரின் பெயருக்கு வழங்கப்படும்.

* 80 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆண்டவனால் ஆத்மாவின் இறுதி அழைப்பு என்ற நிலைபாட்டுக்குள் இல்லாவிட்டாலும், தீர்வு காணமுடியாத நோய்களின் காரணமாக வழமையான ஆரோக்கியமான நிலைமையிலிருந்து செய்து கொள்ளும் ஆயுள் காப்புறுதித் திட்டத்திற்கு மனு செய்து நிராகரிக்கப்பட்டோர் கூட மேற்குறிப்பிட்ட நிபந்தனைகள் என எவையும் இல்லாது மனு செய்து ஆயுள் காப்புறுதி பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் விலைகள் மட்டும் நோய்களின் தன்மைகளுக்கு ஏற்றமாதிரி சற்று மாறுபட்டிருக்கும்.

மேலதிக தெளிவுரைகளுக்கு ஆர்வம் இருந்தால் தொடர்பு கொள்ளுங்கள்.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# முதுமை பாதத்திலிருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது



K. ANANTHANATHAN,
MA, MSW, RSW (Registered Social Worker with OCSWSSW)
kananthan2003@gmail.com

நடக்காத ஒவ்வொரு நாளும் உங்களை வயதானவராக ஆக்கிக்கொண்டே போகும். உங்கள் கால்களை செயல்பாட்டிலும் அத்தோடு வலுவாகவும் வைத்திருங்கள். (Keep your legs active and strong).

தினசரி வயதாகிக்கொண்டே இருக்கும் போது, நம் கால்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவும் வலுவாகவும் இருக்க வேண்டும். எமக்கு வயதாகும்போது நம் தலைமுடி நரைத்து, சருமம் தளர்ந்து, முகத்தில் சுருக்கங்கள் வருவதற்கு நாம் பயப்படக்கூடாது.

நீண்ட ஆயுளின் அறிகுறிகளில், பிரபல மான அமெரிக்கப் பத்திரிகை 'வருமுன் தடுப்பு' (prevention)மூலம் ஆரோக்கிய மான வாழ்க்கைக்கு, வலுவான கால் தசைகள் அனைத்திற்கும் மேலே மிக முக்கியமான மற்றும் இன்றியமையாத ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளன. தயவு செய்து தினமும் நடந்து செல்லுங்கள்.

உங்கள் கால்களை இரண்டு வாரங்களு க்கு அசைக்கவில்லை என்றால், உங்கள் உண்மையான கால் வலிமை 10 வருடங் கள் குறையும். நடந்து செல்லுங்கள்.

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் ஓர் ஆய்வு, முதிய வர்கள் மற்றும் இளைஞர்கள், இரண்டு வாரங்கள் செயலற்ற நிலையில் இருந்தால் கால் தசை வலிமை மூன்றில் ஒரு பங்கு பலவீனமடையலாம் என்கிறது. இது 20-30 வருடங்கள் முதுமையடைவதற் குச் சமம். எனவே நடந்து செல்லுங்கள்.

கால் தசைகள் பலவீனமடைவதால், நாம் மறுவாழ்வு மற்றும் உடற்பயிற்சிகள் செய்தாலும், மீட்க நீண்டகாலம் பிடிக்கும். நடவுங்கள். அதனால், நடைபயிற்சி போன்ற வழக்கமான உடற்பயிற்சி மிகவும் முக்கியமானது.



நமது முழு உடல் எடையை / சுமையை கால்களே தாங்குகிறது. மனித உடலின் முழு எடையையும் தாங்கும் கால்கள் ஒரு வகையான தூண்கள்.

## தினமும் நடைபயிற்சி

ஒரு நபரின் எலும்புகளில் 50% மற்றும் தசைகளில் 50%, இரண்டு கால்களிலும் உள்ளன. நடந்து செல்லுங்கள்.

மனித உடலின் மிகப்பெரிய மற்றும் வலுவான மூட்டுகள் மற்றும் எலும்புகளும் கால்களில் உள்ளன. 10,000 அடிகள்/ ஒரு நாள்.

வலுவான எலும்புகள், வலுவான தசைகள் மற்றும் நெகிழ்வான மூட்டுகள் உடலின் இரும்பு முக்கோணத்தை உருவாக்கி மனித உடலைச் சுமக்கிறது.

ஒருவரின் வாழ்க்கையில் 70% மனித செயல்பாடு மற்றும் ஆற்றல் எரித்தல் (burning the calories) இரண்டு கால்களால் செய்யப்படுகிறது. இது உங்களுக்கு தெரியுமா?

ஒரு நபர் இளமையாக இருக்கும்போது, அவருடைய தொடைகள் 800 கிலோ எடையுள்ள ஒரு சிறிய காரைத் தூக்கும் வலிமை கொண்டவை. கால் உடல் நடமாட்டத்தின் (locomotion) மையம்.

இரண்டு கால்களும் சேர்ந்து மனித உடலின் 50% நரம்புகளையும், 50% இரத்தக் குழாய்களையும், 50% இரத்தத்தையும் அவற்றின் வழியே பாய்ச்சுகிறது. இது உடலை இணைக்கும் மிகப்பெரிய சுழற்சி நெட்வேர்க். எனவே தினமும் நடந்து செல்லுங்கள்.

கால்கள் மட்டும் ஆரோக்கியமாக இருக்கும்போது, இரத்த ஓட்டத்தின் வழமையான மின்னோட்டம் சீராகச் செல்லும். எனவே வலுவான கால் தசைகள் உள்ளோர் கண்டிப்பாக வலுவான இதயத்தைக் கொண்டிருப்பர்.

ஒருவரது வயது, பாதத்தில் இருந்து மேல் நோக்கித் தொடங்குகிறது. ஒரு நபர் இளமையில் இருப்பது போலல்லாமல் வயதாகும்போது, மூளை மற்றும் கால்களுக்கு இடையே நடைபெறும் ஆணைகள் பரிமாற்றத்தின் துல்லியம் மற்றும் வேகம் குறைகிறது.

## தயவுசெய்து நடந்து செல்லுங்கள்

கூடுதலாக, எலும்பின் உரமான கல்சியம் என்று அழைக்கப்படுவது விரைவில் அல்லது பின்னர் காலப்போக்கில் இழக்கப்படும், இதனால் வயதானோர் எலும்பு முறிவுகளுக்கு ஆளாகின்றனர்.

## நடவுங்கள்

வயதானவர்களில் எலும்பு முறிவுகள் தொடர்ச்சியான சிக்கல்களைத் தூண்டும். குறிப்பாக மூளை த்ரோம்போசிஸ் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்படும்.

பொதுவாக வயதான நோயாளிகளில் 15%, தொடை எலும்பு முறிவு ஏற்பட்ட ஒரு வருடத்திற்குள் இறந்துவிடுவர் என்பது உங்களுக்குத் தெரியுமா?

தவறாமல் தினமும் நடந்து செல்லுங்கள் கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது, 60 வயதிற்குப் பிறகும்கூட தாமதமல்ல. நம் கால்கள் படிப்படியாக வயதாகிவிட்டாலும், நம் கால்களுக்கு உடற்பயிற்சி செய்வது வாழ்நாள் முழுவதும் வேலை.

10,000 அடிகள் நடக்க எப்பொழுதும் கால்களை அடிக்கடி வலுப்படுத்துவதன் மூலம், ஒருவர் மேலும் வயதானதைத் தடுக்கலாம் அல்லது குறைக்கலாம்.

## 365 நாட்கள் நடைபயிற்சி

உங்கள் கால்களுக்குப் போதுமான உடற்பயிற்சி கிடைப்பதற்கும், உங்கள் கால் தசைகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்கும் தயவுசெய்து தினமும் குறைந்தது 30-40 நிமிடங்கள் நடக்க வேண்டும்.

இந்த முக்கியமான தகவலை உங்கள் 40 வயது கடந்த நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர வேண்டும், ஏனெனில் ஒவ்வொருவரும் தினமும் வயதாகி வருகின்றனர்.

# நடிகர் திலகம் அமரர் சிவாஜிகணேசனின் 96ஆவது அகவை நினைவுநாள்



வீணைமைந்தன
shan.veenaimynthan@gmail.com

தமிழர்களின் இன, மொழி, கலை, பண்பாடு, கலாசாரப் பிரதிநிதியாகவும், குறியீடாகவும் விளங்கிய நாடக - திரை யுலகப் பிரம்மாவின் அகவை - 96ஆவது நினைவுநாளில் (ஒக்ரோபர் 01, 1928) அவரை வணங்கி வாழ்த்துவோம்.

வாராது வந்த மாதிலகம் புகழ்பாடு!

படிப்பதற்கு நீ எங்கள் பல்கலைக்கழகம்

அன்புக்கு இலக்கணமாம் அன்னை இராஜாமணி
அம்மையாரின் மடிமீது தவழ்ந்தவனே!
அன்னை 'பராசக்தி' அருள்மிக்கொண்டு
அறிமுகமாகிய எங்கள் தமிழ் நாயகனே!
ஐந்து பெரும் கண்டங்கள் வாழ் தமிழர்
அனைவரையும், கலையன்பால் கவர்ந்து
விட்ட கன்னித் தமிழ்க் காவலனே!
அமெரிக்காக் கண்டம் இன்று உன் வரவால் தலைநிமிர
அன்னை இல்லம் காத்து நிற்கும்
ஐங்கரனைத் தொழுதிடுவோம்

நாற்பது ஆண்டுகள் இந்தச் சூரியன் வரவுக்காகக் காத்திருந்த தாமரை நான்! தாகம் மிகக் கொண்டு, கலைத் தாகம் மிகக் கொண்டு கலையுலகக் காவலனாம் 'செவாலியர்' திலகத்தை கவிதைத் தமிழ் எடுத்து களிப்புடனே வாழ்த்துகிறேன்.



கீழ் வானைக் கிழித்து வரும் செங்கதி ரோன் கதிர் ஒன்று கலைவானில் ஒளிபரப்பும் திலகமாய் மாறியதே!
விலை சொல்லமுடியாத விழுப்புரத்து மாணிக்கம் நிலையான புகழ்பேசும் கலைச்சுடராய் மிளிருதிங்கே!

மதுரையில் பிறந்துவிட்ட கடைச்சங்கத் தமிழ் மகளின் இயல், இசை, நாடகமாய் நீ வளர்ந்து சிறந்துவிட்டாய்.

அன்னைத் தமிழை நீ அழகு செய்யும் எழில் கண்டு என்னைப்போல்
வாழ்த்திடுவோர் கோடானு கோடி என்பேன்
முன்னைத் தவம்தானோ? உன்னை இங்கு தந்ததென்பேன்
விண்ணதிர முழங்கி நீ முரசு கொட்டும் காட்சிகள் கண் பார்வை போனாலும்
கனவுகளில் எதிரொலிக்கும்
வருங்காலத் தலைமுறைகள் வரலாற்றைப் புரட்டுங்கால் வடிகாலாய் விளங்கிடுமே நீ நடித்த பாத்திரங்கள் வரலாற்று
நாயகர்கள் உன் வடிவில் வாழ்வதனால்
பெருமைகள் பல சேர்த்துப் பெருமகனாய் உலவுகிறாய்!
பரதனைக் கண்டேனெனப் பாரத ராஜரிஷி (ராஜாஜி) பாராட்டி மகிழ்ந்தாரே!

யாருக்குக் கிட்டும் இந்த வசிட்டர்வாய்ப் பாராட்டு காவியத்தில் நாயகனே உனைக் கைகூப்பி வணங்குகிறோம்!
'இந்து கண்ட சாம்ராஜ்ய' இணையற்ற தலைவன் நீ. இன்று முதல் உன் நாமம் 'சிவாஜி'யுடன் இணையட்டும் என்றுஉனை வாழ்த்திவிட்ட 'பெரியாரின்' புகழாரம் பூமணமாய்க் கமழ்கிறது புதுவீரம் தருகிறது!

தலைமுறை இடைவெளி பலவாகி விட்டாலும் 'முதல் மரியாதை' தலைமகனே உனக்குத்தான்.
'பராசக்தி' தந்திட்ட 'பசும்பொன்' தேவரய்யா பார்புகழும் உனையீன்ற
அன்னையைத் தெய்வம் என்பேன்!
'தெய்வமகனே' என் திருநாவில் உறங்குகிற தேவியைத்
தினம் தொழுவேன்!
கலைமகளின் திருமகனே தமிழ்க் கலையுலகின் நாயகனே.
வாழி நீ வாழி பல்லாண்டு வாழ்க வெனப் பாசமிகு தம்பி நான் பசுந்தமிழால் வாழ்த்துகிறேன்.

('நடிகர் திலகம்' சிவாஜி கனேசன் அமெரிக்கா லாஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு வருகை தந்திருந்தவேளை வாசித்து வழங்கப்பெற்ற வாழ்த்துக் கவிதை - 1995)

# கனடாவில் முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு



குரு அரவிந்தன்

கனடா, தொல்காப்பியமன்றமும் தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து நடத்திய 'முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு' கனடாவில் ரொறொன்ரோவில் 2024 செப்ரெம்பர் 20, 21, 22ஆகிய தினங்களில் முனைவர் திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்வு கனடா தமிழ் இசைக் கலாமன்ற அரங்கில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராக மாண்புமிகு திரு. சித்தார்த் நாத், கனடா இந்தியத் தூதரகத் தலைமைத்தூதர் கலந்து உரையாற்றிச் சிறப்பித்தார்.

இந்த நிகழ்வின்போது கண்காட்சி, ஆய்வரங்கம், சிறுவர் பேச்சுப் போட்டி, சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்குமான விநாடி வினா, தமிழ்த்திறன் போட்டிப் பரிசளிப்புகள், சதிராட்டம், நடனம், நடன ஆசிரியை திருமதி. அற்புதராணி கிருபாராஜ் அவர்களின் மாணவிகளின் குற்றாலக் குறவஞ்சி நாட்டிய நாடகம், கவி ஆசான் சண்முகராசன் சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் அன்பின் ஐந்திணை கவியரங்கம், திருமதி. மாலினி பரராஜசிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பறையிசை, திரு. கஜேந்திரன் சண்முகநாதனின் ஒருங்கிணைப்பில் கலாலயக் கலைஞர்கள் வழங்கிய காத்தவராயன் சிந்துநடைக் கூத்து, திரு. இராச்குமார் குணரட்ணத்தின் நெறியாள்



கையில் தொல்காப்பியம் வில்லுப்பாட்டு, சிறுவர் நாடகம் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதைவிட முனைவர். மு. இளங்கோவன் அவர்களின் ஒருங்கிணைப்பில் 'ஓலைச்சுவடி முதல் இணையத்திரை வரை' என்ற கண்காட்சியும் இடம் பெற்றிருந்தது.

இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கான பல போட்டிகளும், நிகழ்ச்சிகளும் தமிழில் இடம்பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டன. கடந்த 35 வருடங்களாக ஆசிரியர்களாகிய நாங்களும், பெற்றோரும் கனடிய மண்ணில் தமிழ் மொழியை நிலைநிறுத்த எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனை எமது இளைய தலைமுறையினர் மேடையில் தமிழ் மொழியில் முழங்கியபோது, அதைப் பார்த்துப் பரவசமடைய முடிந்தது. இதைவிட திருமதி. வனிதா குகேந்திரன் அவர்களின் கலைக்கோயில் நுண்கலைக்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்



## செந்தில்.....

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கைப்பற்றியது. சிறைக்குள் செந்தில் பாலாஜி இருந்தபோது நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், கோவைத் தொகுதியில் பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் அண்ணாமலையை வென்றது பெரிதும் பேசப்பட்டது. அதிலும் வேட்பாளர் தேர்வு உட்பட தேர்தல் பணிகளில் செந்தில் பாலாஜியின் பரிந்துரையும், ஆலோசனையும் இருந்ததாக, தேர்தலில் கிடைத்த வெற்றிக்குப்பின், கோவை திமுகவினரே சமூக ஊடகங்களில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்தனர்.

இதனால்தான், “செந்தில் பாலாஜியின் மீள் வருகை, தமிழ்நாட்டில் மேற்கு மண்டலத்துக்கு, குறிப்பாக கோவை திமுகவுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது” என்று திமுக வினர் தெரிவிக்கின்றனர்.

“கடந்த உள்ளாட்சித் தேர்தலில், கோவையில் திமுகவுக்கு அசாத்திய மான வெற்றியைத் தேடித் தந்ததில் செந்தில் பாலாஜியின் பங்களிப்பு மகத்தானது. நீண்ட இடைவெளிக்குப் பின், அவர் மீண்டும் வந்திருப்பது, கோவைக்கு மட்டுமின்றி மேற்கு மண்டலம் முழுவதுமே திமுகவுக்கு மிகப்பெரிய எழுச்சியைத் தரும். கடந்த இரண்டு தேர்தல்களிலும் திமுக மகத்தான வெற்றியைப் பெற்றது போலவே, வரும் சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றியைப் பெறுவதற்கு அவரது வருகை, நல்ல துவக்கமாக இருக்கும். கோவையின் மீது முதல்வர் ஸ்டாலின் தனி அக்கறை காட்டி வரும் நிலையில், இங்கு செந்தில் பாலாஜி களத்தில் இருந்து பணி செய்யும்போது, பெரும் பக்கபலமாக இருப்பார்” என்கிறார் திமுகவைச் சேர்ந்த கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்குமார்.

செந்தில் பாலாஜியின் வருகை, கோவை மண்டல திமுகவுக்கு பெரும் பலம் சேர்க்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன், “எடப்பாடி பழனி சாமி, முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணிக்கு நிகராக கோவை மண்டலத்தில் அரசியல் செய்வதற்கு செந்தில் பாலாஜிதான் சரியான நபர் என்பது ஏற்கனவே அரசியல்ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக் கிறது. அதனால் அவரின் வருகை கோவை திமுகவுக்கு நிச்சயமாக வலு சேர்க்கும்,” என்று குறிப்பிடுகிறார்.



ஆனால், திமுக தலைவர் ஆர்.எஸ். பாரதி, “திமுகவின் வெற்றிக்கு அவருடைய உழைப்பு நிச்சயம் தேவை. அது கண்டிப்பாகப் பயன் படும். அவரின் உழைப்பு பெரிதும் மதிக்கத்தக்கது. அது கோவை மண்டலத்துக்கு வலு சேர்த்தது என்ப திலும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், திமுகவைப் பொறுத்தவரை, எந்தத் தனிநபரையும் நம்பி இருக்கவில்லை. எம்ஜிஆர் இந்த இயக்கத்தைவிட்டுப் போனபோதே, கவலைப்பட்டதில்லை. இது ஓர் இயக்கம், இங்கே எல்லாமே கூட்டு முயற்சிதான். அவருடைய வருகை, கூடுதல் பலம். அவ்வளவு தான்” என்கிறார்.

## செந்தில் பாலாஜி மீண்டும் அமைச்சராவாரா?

திமுகவினர் கொண்டாட்டங்கள் ஒரு பக்கம் இருக்க இந்த வழக்கில், அமலாக்கத்துறையின் அடுத்தகட்ட முயற்சிகள் எப்படியிருக்கும், வழக்கின் நகர்வுகள் எந்தத் திசையில் இருக்கும் என்பது பற்றிய விவாதங் களும் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளன. அவர் வெளியில் வந்ததும் மீண்டும் அமைச்சராவாரா என்ற எதிர்பார்ப்பும் கோவை திமுகவினரிடம் எழுந்துள்ளது. செந்தில் பாலாஜி மீண்டும் அமைச்ச ராவதற்கு, சட்டரீதியாகவோ அல்லது அரசியல்ரீதியாகவோ கடும்எதிர்ப்புகள் கிளம்பும் என்ற கருத்து, சமூக ஊடகங்களில் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

ஆனால், “இப்போதைய நிலையில், அவர் நாளையே அமைச்சராகப் பதவியேற்க எந்தத் தடையுமில்லை. டெல்லி முதலமைச்சர் கேஜ்ரிவாலுக்கு இடைக்காலப் பிணை வழங்கியபோது, முதலமைச்சர் அலுவலகத்துக்கே போகக்கூடாது என்பது உட்பட 5 நிபந்தனைகளை உச்சநீதிமன்றம் விதித்தது. ஆனால், செந்தில் பாலாஜிக்கு அதுபோன்ற எந்த நிபந்தனை களும் இல்லை என்பதால், அவர் நாளையே அமைச்சராகப் பதவி ஏற்கலாம். இந்த வழக்கில் தண்டனை பெற்றால் மட்டுமே செந்தில் பாலாஜி அமைச்சராகத் தொடர்வதில் சிக்கல் ஏற்படும்” என்கிறார் மூத்த பத்திரிகை யாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, “செந்தில் பாலாஜி மீண்டும் அமைச்சராவதில் சட்டபூர்வ மாக எந்தத் தடையுமில்லை. ஆனால், அவரை மீண்டும் அமைச்சர் ஆக்குவது குறித்து, முதல்வர்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## கனடாவில்.....

19ஆம் பக்கத்தொடர்ச்சி

கல்லூரி மாணவியரின் நடனம், திருமதி. கௌசல்யா ராஜகுமார் அவர்களின் சிவசக்தி நாட்டியாலயா குழுவினரின் நடனம், திருமதி. தயாளினி ஜீனராஜ் அவர்களின் சலங்கை நர்த்தனாலயா கலைக்கூடக் குழுவினரின் நடனம், திருமதி. நிரஞ்சனா சந்துரு அவர்களின் நடனக்குழுவினரின் நடனம், திருமதி. செந்தில்செல்வி அவர்களின் நாட்டியக் குழுவினரின் நடனம் ஆகியனவும் இந்த நிகழ்வின்போது இடம்பெற்றன.

முக்கிய நிகழ்வாக உலகெங்கும் இருந்து கிடைக்கப்பெற்ற தொல்காப்பிய ஆய்வுக் கட்டுரைகளில் மலருக்குத் தெரிவான ஆய்வுக்கட்டுரைகள் நேரடியாகவும், மெய்நிகர் வழியாகவும் வாசிக்கப்பட்டன. செயற்குழு உறுப்பினர், தன்னார்வத் தொண்டர் மற்றும் முனைவர் இல. சுந்தரம் அவர்களதும் திட்டமிட்ட கடின உழைப்பையும் மூன்றுநாள் நிகழ்வின் போதும் காணமுடிந்தது. மூன்று நாட்களும் விருந்துபசாரமும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. ஆய்வரங்கத்தில் ஆய்வுக்கட்டுரை வாசித்தோருக்கும், போட்டிகளில் பரிசு பெற்றோருக்கும் தொல்காப்பியரின் சிறிய உருவச்சிலை விருதும், சான்றிதழும் வழங்கப்பட்டன.



இந்நிகழ்வை மிகச் சிறப்பாக நடத்தி முடித்த மன்றத்தலைவி, முனைவர் திருமதி. செல்வநாயகி ஸ்ரீதாஸ் அவர்களுக்கும், செயற்குழுவினருக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் கனடா தமிழ் ஆர்வலர்கள் சார்பில் எமது பாராட்டுக்கள் உரித்தாகுக!

## முதியோர் இல்லம் வந்தாச்சி!



நாலுமுடியும் விழுந்துபோயி, தலை
வழுக்கை ஆயிடுச்சி!
நெற்றியது வரண்டு, சுருங்கிப் போய்
நாள்பல ஆயிடுச்சி!
சாலவும் கறுத்திருந்து புருவமது
நரைதட்டிப் போயிடிச்சி!
குளுமையான கன்னமும் ஒட்டியுலந்து
போயிடிச்சி!
காலமெலாம் மூக்கைச்சிந்தி, அதுவும்
ஓஞ்சி போச்சி!
நாலுபேரிடம் பேசிப்பேசி, குரலும்
கம்மிப்போயிடிச்சி!
எமனை எதிர்ப்பார்த்து, முதியோர்
இல்லம் வந்தாச்சி!

கண்கள் இருண்டுபோயி, தலை எனக்கு
சுத்துதையா!
காலையில் உண்டுவந்த இட்லியையும்
மருமகள் நிறுத்திவிட்டாள்!
கண்ணான என்பேரன், “தாத்தாவுக்கும்
இட்லிவை” என்றான்!
“கிழவருக்கு ஜீரணம் ஆகாதுடா!”
என்றவள், சொல்லிவிட்டாள்!
எண்ணமது கெட்டுப் போயி, பழைய
சோற்றைத் தின்னவைத்தாள்!
‘அதை உண்டு ஜுரம் வந்து நான்
சற்று இருமியதும்’
‘திண்ணையில் போய்நீ படு!’ என
அவள் விரட்டிவிட்டாள்!
குளிரிலும் மழையிலும் நனைந்ததாலே
நடைப்பிணமாகிவிட்டேன்!

பெற்றயென் ஒருமகனோ, ஏனென்று
கேட்கவில்லை!
‘வீட்டிலும்நான் படுக்கக்கூடாதா’? என்று
நான் கேட்டவுடன்
சற்றும் தயக்கமின்றி, ‘திண்ணையும்
உமதுதானே’ என்றான் நக்கலாக!
‘இங்கே தான் நல்ல காற்றோட்டம்!’
எனச்சிரித்தாள், மருமகளும்!
கற்றுநீ செல்வந்தனாவதற்கு நான்
உழைத்ததற்குப் பதிலா இது?’
என்றேன்.
உடனே சினத்தோ, ‘கடமைதானே,
நீர்செய்தீர்?’ எனச் சொல்லி,
சற்றும் மனசாட்சியே இல்லாமல்:
கண்டபடி திட்டித்தீர்த்தான்!
நிற்கவும் சக்தியற்ற எனைப்பிடித்து,
ஆட்டோவில் ஏறவைத்தான்!
கற்றக் கல்நெஞ்சனோ,
முதியோரில்லத்தில் எனைக்
கொண்டுவந்து தள்ளிவிட்டான்!



காயத்தாள் கத்தியைச்
சொருகியதுபோல் நான்,
அழுகின்றேனே!
ஆறுதல் சொல்லவேனும்
ஆளேயில்லையே! எந்தனுக்கு!
நாய்ஒன்று செத்துப்போனால், வீதியே,
அதன் சமாதி ஆகிவிடும்.
என்னுயிர் பிரியுமிடமோ, இந்த
முதியோர் இல்லத்தில்தான்!
பேய்மனம் படைத்தவனோ, வீட்டைவிட்டு
விரட்டிவிட்டான்!
நிற்கவைத்து அவனிடம் நியாயம்கேட்க
அரசால்தான் முடியும்!
மாய்ந்துநான் மடியும்மட்டும்,
‘ஜீவனாம்சம்’ தரச்சொல்லி
அவனுக்கு ஆணையிட அரசுஇனி
முன்வருமா?